**N THE COURT OF JUDICIAL MAGISTREATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 207/2018 P.W. 6/L.W.3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. ரம்யா | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. சதீஸ் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 08.04.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை** :

**குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து இல்லதரசியாக இருந்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபரை எனக்குத் தெரியாது. அ.சா1 எனது மாமனார். அ.சா2 எனது கணவர். 28.10.2016 ம் தேதி இரவு 10.00 மணியளவில் பாலப்பள்ளத்தில் திருமண விழாவிற்கு சென்றுவிட்டு குளச்சல் வழியாக லெட்சுமிபுரம் தாண்டி நாங்கள் காரில் பருத்திவிளை அருகே வந்துக்கொண்டிருந்த போது காரின் முன்னால் ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் எஸ் வடிவில் கட்டடித்துச் சென்றுக்கொண்டிருந்தார்.

2. அவர் சிறிது நேரத்தில் இருசக்கர வாகனத்தில் இருந்து தவறி கீழே விழுந்துவிட்டார். எனது கணவர் காரை நிறுத்திவிட்டு பார்த்தபோது இருசக்கர வாகனத்தில் இருந்து கீழே விழுந்த நபர் எனது கணவரின் சட்டையைப் பிடித்து அடிக்க முயன்றார். எனது மாமனார் அ.சா1 அதை தடுத்தபோது இருசக்கர வாகனத்தில் கீழே விழுந்து எழுந்து வந்த நபர் எனது மாமாவை கையால் உதட்டின் அருகில் அடித்தார். எனது மாமாவிற்கு பல் விழுந்து காயம் ஏற்பட்டது.

3. எனது மாமனார் தடுத்ததால் எனது குழந்தைகளின் மீது அடிபடவில்லை. எனது மாமனார் அ.சா1ற்கு தெரிந்த 2 நபர்களான ஜெகன் மற்றும் மகேஸ்வரி ஆகியோர் வந்ததால் பிரச்சினையை முடித்துவிட்டார்கள். அதன் பிறகு சிகிட்சைக்காக எனது மாமனாரை மருத்துவமனைக்கு எனது கணவர் அழைத்துச் சென்றார். சம்பவம் சம்மந்தமாக எனது மாமனார் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை** :

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.